அவர்கள் டேம் சேப்டி பர்ப்பஸ் என்ற ஒரு திட்டத்தை தயாரித்து —அணைகளை பாதுகாக்கின்ற திட்டம்—உலக வங்கியின் ஒப்புதலோடு 43 கோடி ரூபாய் அவர்கள் தருவதாக சொல்லி இருக்கிறார்கள். அதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நம்முடைய அணைகளை எல்லாம் பலப்படுத்த வேண்டும் என்று ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே தான் இந்த அணையும் வருகிறது. அதன்படி நான் ஏற்கெனவே சொன்ன பல பணிகளை செய்ய முடியும். இது போன்ற பணிகளை செய்வதற்கு அரசு அந்த திட்டத்திலே முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 247, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

247—

சின்னபக்கலத்தில் மின்மாற்றி அமைத்தல்.

*10271—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதி, பச்சமலை ஊராட்சி, சின்னபக்கலத்தில் மின்மாற்றி (Transformer) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சின்னபக்கலத்திற்கு, பெரியபக்கலத்தில் வைக்கப்பட்டுள்ள மின்மாற்றி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இம் மின்மாற்றியின் கொள்திறன் போதுமானதாக உள்ளதால் சின்னபக்கலத்தில் தனியாக மின்மாற்றி அமைக்கத் தேவை எழவில்லை என இந்த அரசு கருதுகிறது. ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பச்சை மலை சின்னபக்கலத்தில் வசிப்பவர்கள் அனைவரும் மலை வாசிகள். அவர்கள் 2 ஏக்கர், 5 ஏக்கர் என்று நிலம் வைத்துக் கொண்டு விவசாயம் செய்கிறார்கள். மின் அழுத்தம் குறைவாக இருக்கிற காரணத்தால் அவர்களது விவசாய பம்பு செட்டுகளில் காயில்கள் வெந்து விடுகின்றன.

1993 ஏப்ரல் 6]

வெந்த அந்த மின் மோட்டாரின் காயில்களை பழுது பார்க்க 5, 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தம்மம்பட்டிக்கு செல்ல வேண்டியிருக்கிறது. அவர்களால் ஆயிரம், 2 ஆயிரம் என்று செலவு செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அங்கே ஒரு டிரான்ஸ்பார்மர் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சின்னபக்கலத்திற்கும் மற்றும் பெரிய பக்கலத்திற்கும் இடையே உள்ள தூரம் 2 கிலோ மீட்டர் தான். ஏற்கெனவே அந்த பகுதிக்கு கொப்பம்பட்டி 110/11 கே. வி. மூலம் அந்த துணை மின் நிலையம் மூலம் மின்சார சப்ளை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியிலே குடிசைகள் குறைவாகத்தான் இருக்கின்றன. 24 குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது என்று சொன்ன காரணத்தினால் அதை ஆய்வு செய்து அந்தப் பகுதியிலே இருக்கிற மின்சார மோட்டார்கள் எப்படி இருக்கிறது என்ற கணக்கிலே பார்த்து அதற்குரிய வழி முறைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் த்ரீ ஃபேஸ் மின்சாரம் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த ட்ரான்ஸ்ஃபார்மர் வந்தால் த்ரீ ஃபேஸ் மின்சாரத்தை பயன்படுத்தி அந்தப் பகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் அதிக அளவிலே தங்கள் கிணறுகளுக்கு மின்சார வசதி பெற முடியும். எனவே நடப்பு நிதியாண்டிலே அந்தப் பகுதியில் ட்ரான்ஸ்ஃபார்மர் அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார பம்பு செட்டுகள் இயங்குவதற்கு த்ரீ பேஸ்கள் கனெக்ஷன் இருந்தால் தான் முடியும் என்பதை இந்த அரசு அறியும். ஆகவே அதிலே இருக்கின்ற பிரச்சினை புதிதாக ட்ரான்ஸ்ஃபார்மர் அமைப்பதா அல்லது பக்கத்திலே இருக்கின்ற அந்த பெரியபக்கலம் கிராமத்தில் இருக்கின்ற ட்ரான்ஸ்பார்மர் மூலம் மின்சாரம் கொடுப்பதா என்பது தான் பிரச்சினை. ஆகவே அங்கே இருக்கின்ற மின் அழுத்தம் போதுமானதாக இல்லை என்று இந்த அரசு கருதுமேயானால் ட்ரான்ஸ்பார்மர் புதிதாகப் போடலாம் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே இந்த ஆண்டு அதை பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 248. திரு. ஏ. டி. செல்லசாமி. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

248—

ஐ.ஆர்.டி.பி. திட்டத்திற்கு மாற்றுத் திட்டம்.

*9859—திரு. ஏ. டி. செல்லச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் கடன் திட்டமான ஐ.ஆர்.டி.பி. வழங்குவதில் வருமான உச்ச வரம்பை மாற்றவும், காலதாமதத்தைத் தவிர்க்கவும், மாற்றுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை அவை முன் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

1992-93 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடும்பத்தின் ஆண்டு நிகர வருமானம் ரூ. 11,000 வரை உள்ளவர்களுக்கு கடன் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் மற்றும் மான்யம் துரிதமாக வழங்குவதற்கு கீழ்க்கண்ட திட்டங்கள் பரிட்சார்த்தமான கீழ்க்கண்டுள்ள வட்டாரங்களில் மட்டும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

1. குடும்பக் கடன் திட்டம்: (Family Credit Plan)

1. பெரியார் மாவட்டம்: ஈரோடு, கோபி மற்றும் அந்தியூர் ஊராட்சி ஒன்றியங்கள்.

2. தஞ்சாவூர் மாவட்டம்: தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் ஊராட்சி ஒன்றியங்கள்.

3. நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம்: திருத்துறைப்பூண்டி மற்றும் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியங்கள்.